25 காலணா Regd. No. M. 2811.

சுதந்திரச்சங்கு


“ சங்கு கோண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தாணிக் கெல்லா மேடுத்தோதுவோமே ”

வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா 4½ ரூபா

ஆசிரியர் :
சங்கு ஸுப்ரஹ்மணியன்.

போன் நெ. 8088 பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. திங்கள் 27-3-33

எரோப்ளேனில் ‘பாதுகாப்பு’



பாரச்சூட்டிலுள்ள தேசீய வாதி :—ஹல்லோ பாத்ரோ! ‘பாதுகாப்புகள்’ என்ற கயிறு வைஸ்ராயின் நலத்திற்காக ஏற்பட்டதப்பா! இந்தியர்களைக் கட்டிப் போடவே அந்தக் கயிறு!

விமானத்தில் தோங்கும் பாத்ரோ :—இல்லை! இல்லை! நம்முடைய நலத்துக்காகத்தான் அவை ஏற்பட்டன! அந்தக் கயிறு இல்லாவிட்டால் என் கதி என்னவாகு மென்று பார்த்துக் கொள்!

தேசிய வாதி :—ஸபாஷ்! உன்னை யன்றோ கூட்டுப் பார்லிமெண்டு கமிட்டிக்கு அனுப்ப வேண்டும்,

கவர்னர் புகழ்கின்றார்

சென்னைக் கவர்னர் சட்டசபையின் ஆயுளை நீட்டுவதற்காக வந்த வேளையில் ஓர் பிரசங்கம் செய்தார். அதில் சர்க்கார் பிரசாதமாகிய வெள்ளைக் கடுதாசியைப் பற்றி பிரமாதமாகப் புகழ்ந்தார். கவர்னர் ஜனரலின் விசேஷ அதிகாரங்களையும், 'பாதுகாப்புகள்' என்ற பகுதியையும் பெருமையாக ஆதரித்துப் பேசினார். வேலிக்கு ஓணான் சாட்சி யென்பது போல நமது கக்ஷிக்கு சென்னை சட்டசபையின் சரித்திரத்தை உதாரணமாக்கினார்.

"சென்ற 1926ம் வருஷத்தினின்று ஒரு தடவையாவது சென்னைக் கவர்னர் தமது ஸர்வாதிகாரத்தை உபயோகிக்கவில்லை. அதற்கு முன்னமேயும் ஏதோ 8 சமயங்களில்தான் அந்த அதிகாரத்தை உபயோகிக்க நேர்ந்தது. ஆகவே வெள்ளைக் கடுதாசியில் 'பாதுகாப்புகள்,' 'விசேஷ அதிகாரங்கள்' என்ற பகுதியைக் கண்டு எவரும் மிரள வேண்டாம்" என்று கூறினார்.

சென்னைச் சட்ட சபையைப் போன்ற குலாம் சபையை எந்த தேசத்திலும் காண முடியாது. அப்பேர்ப்பட்ட சபையை கவர்னர் உதாரண மாக்கிப் பேசுவதை என்னென்பது! இப்படிப்பட்ட சட்ட சபை இருக்குமானால் சர்வாதிகாரம் தேவையே யில்லை யன்றோ!

பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பார்கள். இதே சென்னைச் சட்ட சபையில் மந்திரியாக இருந்த பரசுராம பாத்ரோ என்ற பேர்வழி சமீபத்தில் உளறிய உளறல் சென்னைச் சட்ட சபையின் போக்குக்கு உதாரணமாகும்.

"நாம் 'பாதுகாப்பு' என்ற பதத்துக்கு இவ்வளவு பயப்படுவானேன்? எல்லோருடைய நன்மைக்காக உத்தேசித்தே விசேஷ அதிகாரங்கள் கவர்னர் ஜெனரலுக்கு தரப்பட்டுள" என்று பாத்ரோ கூறினார். சட்டிக் கேற்ற சட்டுவம்! சபைக் கேற்ற பாத்ரோ!

இப்பேர்ப்பட்ட பேர்வழிகளை அங்கத்தினர்களாகவும், மந்திரிகளாகவும் கொண்டுள்ள சென்னைச் சட்ட சபையை தேச மக்களின் பிரதிநிதி சபையென எவ்வாறு கூறுவது? தெனாலிராமன் வளர்த்த பூனை ஒரு தரம் சுட்ட பாலை மோந்து விட்டு பாலையே மறந்து விட்டது. சென்னைச் சட்ட சபை அங்கத்தினர்களோ, கவர்னர் அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்குக் கூட இடந் தாராமல் சலாம் போட்டுக் கொண்டிருக்கின்றனர். இதுதான் வித்தியாசம்.

மின் வேட்டு

ஜவஹர்லாலிடம் 'காபுரா'

ஐக்கிய மாகாணத்தில் ஹோம் மெம்பரா யிருந்த சத்ரி நவாப் என்ற மகமதிய கனவானுக்கு அந்த மாகாண ஆக்டிங் கவர்னர் பதவி கிடைத்திருக்கிறது. ஒரு இந்தியனுக்கு இந்தப் பதவி கிடைத்தவுடன் சீமைப் பத்திரிகையான 'மார்னிங் போஸ்டு'க்கு ஆத்திரம் பொறுக்கவில்லை. "இதென்ன கூத்து! ஒரு இந்தியனுக்கு கவர்னர் பதவியா? வெள்ளைக் கடுதாசியில் கவர்னர் பதவி சம்பந்தமாக பாதுகாப்புகளேது மில்லையே! இனி இந்தியாவில் ஜவஹர்லால் நேரு, விட்டல்பாய் படேல் போன்றோர்களும் மந்திரிகளாய் வந்தால் கவர்னர்களாக வந்து விடுவார்களே! அத்தகையோர் கவர்னர்களாக வந்தால் இந்தியாவை எப்படிக் காப்பது?" என்று அப்பத்திரிகை ஓலமிட்டிருக்கிறது. கண் காணாத இடத்தில், சிறையில் கிடக்கும் ஜவஹர்லாலிடமும், வேறோர் சீமையில் உலாவிக் கொண்டிருக்கும் விட்டல்பாய் படேலிடமும் இந்தப் பத்திரிகைக்கு இவ்வளவு 'காபுரா'வா? இந்தியாவில் கவர்னர் பதவி சர்க்காரால் கொடுக்கப்படும் ஒரு பிச்சை உத்தியோகமே என்பதை அனைவரும் அறிவோம். பிரிட்டிஷாரின் தற்போதைய ஆட்சி முறையிடம் கை கட்டிக் காத்து நின்று இந்த உத்தியோகத்தை ஜவஹர்லால் போன்ற வீரர்கள் வாங்கிக் கொள்வார்களா மாட்டார்களா வென்பதை ஆலோசிக்க 'மார்னிங் போஸ்டு'க்கு மூளை யில்லாதது பற்றி வருந்துகின்றோம்.

மீண்டும் ஒத்திப் போடப்பட்டது

ரங்கய்யரின் ஆலயப் பிரவேச மசோதாவைச் சட்ட சபையில் நுழைய வொட்டாமல் என்னென்னவோ சூழ்ச்சிகளெல்லாம் செய்யப்பட்டு ஒத்திப் போடப்பட்டு விட்டது. ராஜாஜி சொல்லுகின்றபடி அடுத்த 1934ம் ௵ ஜனவரி மாதத்தில்தான் இந்த மசோதாவின் விவாதம் சரியாக நடைபெறலா மென்று ஊகிக்கப்படுகிறது. 'ஆறிய கஞ்சி பழங் கஞ்சி' என்று இந்த மசோதாவின் சூடு குறைந்து விடுமென சூழ்ச்சிக்காரர்கள் நினைத்த போதிலும், அவ்வாறு இந்த மசோதா ஆகப்போவதில்லை யென்பதை நாமறிவோம்.

சோற்றில் முழுப் பூசணி

வங்காளச் சட்ட சபையில், வரவு செலவு விவாதத்தில் சிறைச்சாலை நிர்வாக விஷயப் பேச்சு வந்தது. அரசியற் கைதிகளின் சாப்பாடு, இட வசதி, நடத்தும் விதம் ஆகிய யாவும் மோசமா யிருப்பதைப் பற்றி, தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் எடுத்துரைத்தார்கள். சர்க்கார் உறுப்பினரான ஸர். பி. வி. மித்தர் அவற்றிற்குப் பதில் கூறுகையில், முழுப் பூசணிக் காயைச் சோற்றில் மறைப்பது போல, "அரசியல் கைதிகள் என்பது தப்பான பெயர்; நாங்கள் அரசியல் கைதிகள் என்று யாரையும் அங்கிகரிக்கவில்லை" என்று சொல்லி விட்டார்.

இது என்ன பெரிய முழு மோசமா யிருக்கிறதே என்று நினைத்தோம். ஆனால், அவர் பேச்சின் பிந்திய சில வரிகளைப் படித்த பொழுது, அவர் மோசக்காரரல்லர் என்பது விளங்கியது. "அரசியற் கைதிகள் என்று குறிப்பிடத்தக்கவர் எவரு மில்லை" என்று பொருள்பட அவர் உளறி விட்டார்.

ஸர். மித்தருக்கு அந்த சமயத்தில் கொஞ்சம் ஜன்னி பிறந்திருக்கும் போலிருக்கிறது. அடுத்தாற் போல அவர் என்ன கூறியிருக்கிறார் தெரியுமா? "அரசியல் காரணங்களுக்காகச் சிறை ஏற்றுக் கொண்டவர்கள் ஜெயில் நிர்வாகத்தைச் சிரமப்படுத்த முயன்றார்கள்" என்றார். முன்னால் அவர் கூறிய திருவாக்குக்கும் இதற்கும் என்ன பேதம்?

அரசியல் கைதிகள் வேறு, அரசியல் காரணங்களுக்காகச் சிறை புகுவோர் வேறு, என்று அர்த்தம் பிரிக்க, ஸர். மித்தர் எந்தப் பள்ளிக்கூடத்தில் கற்றாரோ தெரியவில்லை. அது கிடக்கட்டும். காந்தியும் இர்வினும் அரசியல் ஒப்பந்தம் செய்து கொண்ட வுடனே சிறையினின்று யாரோ சில கைதிகளை விடுதலை செய்தார்களே, அவர்கள் யார்? சட்ட மறுப்பு இயக்கத்தில் கைது செய்யப்பட்ட 'ராஜீயக் கைதிகளைத்' தானே அப்போது விடுதலை செய்தார்கள். மாதா மாதம் அரசியல் கைதிகள் கணக்கு வெளியிடுகிறார்களே; அது எவ்வாறு? ஒவ்வொரு சிறையிலும் இன்றும் அரசியல் கைதிகளுக்குத் தனி ஜாபிதா வைக்கப்பட்டிருக்கிற தென்பது தெளிந்த உண்மையே! அப்படியல்ல வென்று, ஸர் மித்தர் மார் தட்டிச் சொல்லித்தான் பார்க்கட்டுமே!

சர்க்கார் உப்புக் கருணை

நமது நாட்டைச் சுற்றிலும் கடல் சூழ்ந்திருக்கிறது. கடற்கரை யோரத்திலே பல விடங்களில் இயற்கையன்னை பரிசுத்தமான உப்பைக் குவித்திருக்கிறாள். காற்றையும் நீரையும் போல இலவசமாகக் கிடைக்கக்கூடிய இந்த உப்பு ஏன் சர்க்கார் வரிக்கு உட்பட்டு, ஒவ்வொரு ஏழையின் தலையிலும் சுமையாய்க் குந்த வேண்டும்?

இந்த உப்பு வரியின் அநியாயத்தைப் பற்றிக் கண்டித்து உரைத்தவர்களும், இந்த வரியைப் போக்க கிளர்ச்சி செய்தவர்களும் கோடானு கோடி. இப்பொழுது பிரிட்டிஷ் பிரதம மந்திரியாயிருக்கிறாரே, அந்த மிஸ்டர் மாக்டொனல்டு துரை கூட ஒரு காலத்தில் இதனை மிகவும் கண்டித்தார். உள்நாட்டு உப்புக்கு வரி போட்டதால், தம்படிக்குக் கிடைக்கக்கூடிய உப்பு அணுக்கணக்கில் விலை ஏறிற்று. உள்நாட்டு உப்புத் தொழிலும் பயன் படாது போயிற்று.

இப்பொழுது இந்தியச் சட்ட சபையில் அரசாங்கத்தார் ஓர் மசோதாவைக் கொணர்ந்திருக்கிறார்கள். இது அந்நிய நாட்டிலிருந்து வந்திறங்கும் உப்புக்குத் தடை வரி விதிப்பதாகும். அது நல்லதுதான். "இந்தியாவானது உப்பு விஷயத்தில் பிறர் கையை எதிர்பார்க்காமலிருக்க வேண்டு மென்பதற்காகவே இம் மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது" என்று கருணை ததும்ப சர்க்கார் மெம்பர் பேசினாராம். ஆகா! எவ்வளவு கருணையடா!

அந்நிய உப்புக்கு வரி விதிப்பதால் நமக்கு விசேஷ பயனில்லையே! நம்மீது உப்பு வரி என்ற விலங்கு இருக்கும் வரை உள்நாட்டு உப்புத் தொழில் வளருவதற்கு வழியேயில்லை. உள் நாட்டு உப்புத் தொழில் வளர, சர்க்கார் ஒரு உதவியும் புரிய வேண்டாம். "நரி வலமும் போக வேண்டாம்; இடமும் போக வேண்டாம். மேலே விழுந்து பிடுங்காமல் போனால் போதும்" என்பது போல, உப்பின் மீது வரி விதிக்காமல் சும்மா விருந்தாலே, உப்பு உற்பத்தி செய்யும் தொழில் வளர்ந்து விடுமென்று நினைக்கிறோம்.

காந்தி-இர்வின் ஒப்பந்தத்தின்படி இருந்த உப்புரிமையைக் கூடப் பலவிடங்களில் பறித்துவிட்ட அரசாங்கம், சமுத்திரக் கரையில் சும்மாக் கிடக்கும் உப்பைக் கையால் தொட்டால் கூட தண்டிக்கும் அரசாங்கம், இந்திய உப்புத்தொழிலில் கருணை பிறந்து விட்டதாகப் பாசாங்கு புரிகிறது. அடடா! என்ன கருணை!

முதுகுக்குப் பின் முணுமுணுப்பு

வங்கமணி சுபாஷ் சந்திர போஸை, சர்க்கார் ஆள் தூக்கிச் சட்டப்படி கைது செய்து விசாரணை ஏதும் செய்யாமல் சிறையிற் போட்டது. சிறையில் போஸ் நோயில் விழுந்து வாடினார். காரியம் மிஞ்சிப் போய் விடும் போலிருந்தது. பலர் கிளர்ச்சி செய்தார்கள். ஈவு இரக்கமின்றி வெகு காலம் பேசாதிருந்த இவ்வரசாங்கம், அவர் வைத்தியம் செய்து கொள்ள இப்போது வெளிநாடு போக அனுமதி கொடுத்தது. அதிலும் கட்டுப்பாடுகள் எத்தனை? தம் கிழத் தாய்தந்தையரை, நோய் வாய்ப்பட்ட முதியோரை, பார்க்கக் கூட சர்க்கார் இடங் கொடுக்கவில்லை. ஏன்? ராஜாங்கம் கவிழ்ந்து விடும் போலும்! கடைசியாக கப்பல் புறப்படும் வரையில் போலீஸ் காவல்! இத்தனை ஆர்ப்பாட்டமும் செய்து அவரை ஊரை விட்டு அனுப்பிய அரசாங்கம், இப்பொழுதுதான் அவரைச் சிறைப் பிடித்த உத்திரவை ரத்துச் செய்ததாக அறிவித்துளது. வெளி நாட்டிலும் சர்க்காரால் குறிப்பிடப்பட்ட நாடுகளில் தான் ஸ்ரீயுத போஸ் வளைய வளைய வரலாமே யன்றி வேறு நாடுகளுக்குப் போகக் கூடாதாம். உதாரணமாக அவர் இங்கிலாந்துக்குப் போகக் கூடாதாம்! என்னே நிபந்தனைகள்!

இந்தியச் சட்ட சபையில், அவரைப் பற்றிய ஒரு கேள்விக்குச் சர்க்கார் மெம்பர் பதில் கூறுகையில் இதற்கு அணைகோலிக் கொண்டிருக்கின்றார். "பலாத்காரப் புரட்சியிலிருந்து அவர் விலகிக் கொண்டார் என்று நம்ப"க் காரணங்கள் கிடைக்க வில்லையாம்! இப்படிக் கூறுவது என்ன நியாயத்தின் பகுதியோ?

ஒரு மனிதர் பதில் சொல்ல முடியாத இடத்தில், அவரைப் பற்றிக் குற்றம் சாற்றுதல் சிறிதும் தர்மமல்ல. ஒருக்கால் போஸ் பலாத்காரப் புரட்சியில் சேர்ந்திருந்தால், தக்க சாட்சியங்களுடன் சர்க்கார் வழக்குத் தொடுத்திருக்கலாமே! அவ்வாறு செய்யாமல் ஆள் தூக்கிச் சட்டப்படிச் சிறைப் படுத்துவானேன்?

சுபாஷ் பாபு இந்தியாவிலில்லாத சமயத்தில், அவர் விஷயத்தைப் பற்றி சர்க்கார் அதிகாரிகள் சன்னப் பின்னவென்று பின்னல் பேசுவது அருவருக்கத்தக்க செயலாகும்.

மகா தியாகம்

(தபாற்கூலி உட்பட 5 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.)

தோல் வெளுக்கும் மருந்து

நோபல் பரிசுகளில், சமாதானப் பரிசு இரண்டு வருஷங்களாக நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறது; யாருக்கும் கொடுக்கப்படவில்லை. பரிசுக் கமிட்டியார் உலக முழுவதும் துருவித் துருவித் தேடினாலும், ஒரே ஒருவரைத் தவிர, ஏற்ற மனிதர் எவரும் அகப்படப் போவதில்லை. ஏனென்றால், உலக சமாதானம் பேசும் எல்லா ராஜ தந்திரிகளும், படையைப் பெருக்குகிறார்கள்; பிறதேசங்களை என்றென்றும் கட்டியாள வழி தேடுகிறார்கள்; பிற நாடுகளின் பொருளைப் பறிக்க தோலிருக்கச் சுளை விழுங்கும் திட்டங்கள் போடுகிறார்கள்.

படைப் பலமின்றியே உலக சமாதானத்தை நிலைநாட்ட வேண்டுமென்று, மகாத்மா காந்தியைத் தவிர வேறெந்த மனிதரும் கூறவில்லை. ஆனால் அவருக்குக் கொடுத்தால், சச்சரவு ஏற்படுமாம்! ஏகாதிபத்தியக் கிறுக்குக் கொண்ட மேனாட்டு ராஜ தந்திரிகளுக்கு அது அசௌகரியத்தை உண்டாக்கிவிடுமாம். ஆகையால் தான், நோபல் பரிசுக் கமிட்டியார் இவ்விஷயத்தில் "சும்மா இருப்பதே சுகம்" என்ற வேதாந்தத்தைக் கடைப்பிடித்து விட்டார்கள்.

இந்த சமயத்தில் ரசாயன ஆராய்ச்சி செய்யக் கூடியவர்களுக்கு ஒரு நல்ல யோசனை இரகசியமாகக் கூற விரும்புகிறோம். கறுப்புத் தோலை வெள்ளைத் தோலாக மாற்றிவிட அவர்கள் ஏதாவதொரு மருந்தைக் கண்டு பிடித்து விட வேண்டும். இப்பொழுது நோபல் சமாதானப் பரிசை அடித்துவிட அவர்களுக்கு நல்ல "சான்ஸ்" கிடைக்கும். உலகில் சிலர் தோல் வெள்ளையாகவும், மற்றவர் தோல் வேறு நிறங்களாகவும் இருப்பதால் தானே, அநேகம் தொல்லைகளும் சச்சரவுகளும் நிகழ்கின்றன. சுயநலமும் சலுகையும் தாண்டவமாடுவதற்கு மனிதத் தோலின் நிற பேதமே முக்கிய காரணமாகும்.

உலகத்திலுள்ளோரனைவரும் ஒரே நிறத் தோலுடையவர்களா யிருப்பின் உலகத்தில் சமாதானம் நிலவுவது நிச்சயம். ஆகவே, எந்தத் தோலையும் வெளுக்கச் செய்யும் மருந்தைக் கண்டு பிடிக்கும் நிபுணருக்கு சமாதான நோபல் பரிசு கிடைப்பதும் நிச்சயம். ரசாயன சாஸ்திரிகளே விழிமின்!. எழுமின்! தோல் வெளுக்க மருந்துகண்டு பிடியுமின்! இச்சமயம் தப்பினால் மறு சமயம் கிடைப்பதரிது.

உண்மையான பிராம்மணீயம்

(மகாத்மா காந்தி)

[“தீண்டாமை விலக்கு இயக்கத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் வேண்டுமென்றே பொய்களை கூறிப் பிராம்மணரைத் தூற்றுகிறார்கள். பிராம்மணர் மாத்திரமா தீண்டாமையை அனுஷ்டிக்கிறார்கள்? பிராம்மணர்களும் தீண்டாமை விலக்குக்கு உழைக்கவில்லையா?” என்று ஒரு புரொபஸர் எழுதிய கடிதத்திற்கு, காந்திஜியின் பதில்.]

பிரம்மத்தை, அதாவது இறைவனை அடைவிக்கக் கூடிய தூய ஞானமே பிராம்மணீயம் என நான் கருதுகிறேன். என்றாலும், பிராம்மணர்க ளெல்லோரும் உண்மையான பிராம்மணீயத்தின் பிரதிநிதிகளா யில்லை. மனித சமூகத்தைச் சேர்ந்த மற்ற வகுப்பினர்களுந் தான் அவ்வாறு மாறிவிட்டார்கள். ஆனால், சில மனிதர்கள் ஞானத்தையும் சத்தியத்தையும் தேடி யடைவதற்காகத் தங்களுக்குள்ளதையெல்லாம் துறந்திருக்கிறார்கள். அவ்விதம் துறந்தவருள், உலகிலுள்ள மற்றெல்லா வகுப்பினரையும் விட பிராம்மணர் விகிதமே மிக அதிகம் என்று நான் நம்பவேண்டியவனா யிருக்கிறேன்.

அவர்களிடமுள்ள குறைகளைப் பார்க்கும்போது மனித சமூகத்தைச் சேர்ந்த மற்றவர்களைப் போலவே அவர்களும் தவறிழைக்கக் கூடியவர்களே யென்பது தெரிகிறது. தெய்வீகம் வாய்ந்தவை யென்று சொல்லப்படும் நூல்களில் பல இழிவான கருத்துக்கள் புகுந்து விட்டன. சுயநலமற்று பிராமணன் வாழ வேண்டுமென்ற விதிகளுடைய தூய நூல்களில் பிராமணனின் சுயநலம் சம்பந்தமான விதிகளும் கலந்து விட்டன. தங்கள் ஜாதிக்கு ஆதரவு தேடிக் கொள்ளுவதற்காக சுயநல விதிகளை அவர்கள் செய்து கொண்டிருக்கலாம். ஆனால், தெய்வீக நூல்களில் நுழைக்கப்பட்ட சுயநலக் கொள்கைகளை உதறி அடிக்கடி எழுந்ததும் பிராம்மணர்களே யாவர். தங்களிட மிருந்து தீமைகளை யொழித்துத் தூய்மை செய்து கொள்ள முயற்சி செய்தவர்களும் அவர்களே.

பிராம்மணீயத்தினிடமும் பிராம்மணர்களிடமும் எனக்கு மதிப்பு இருக்கிறது; அதற்குக் காரணம் சொல்லத் தெரிய வில்லை. பிராம்மணரென்போரிற் சிலர், சீர்திருத்த இயக்கத்தை வெறி பிடித்தவர் போல எதிர்க்கின்றார்கள். அவர்களுக்குத் திறமை யிருக்கிற தென்பதில் சந்தேகமில்லை. சீர்திருத்தத்தை எதிர்ப்பதற்கு அத் திறமையை அவர்கள் உபயோகிக்கின்றார்கள். இது வருத்தத்தையே தருகின்றது என்றாலும், இன்றைய சீர்திருத்த இயக்கமும் பிராம்மணராய்ப் பிறந்தோராலேயே நடத்தப்படுகின்றது. இவர்கள் தங்கள் பிறப்பை குறித்துப் பெருமை பாராட்டுவோரல்லர். இது எனக்கு ஆறுதல் தருகின்றது; பாரபட்ச மற்ற ஒவ்வொரு ஹிந்துவும் இதனால் ஆறுதலடைய வேண்டும்.

பிராம்மண வகுப்பு கேவல நிலைமைக்கு இறங்கி விட்டது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். அவ்வாறு இறங்கி யிராமல், பிராம்மணர்கள் தங்கள் பண்டைக் கொள்கைக்கிசைய நடந்து கொண்டிருப்பார்களாயின், ஹிந்து மதம் தற்போதைய கேவல நிலைமைக்கு வந்திராது. பிராம்மணர்கள் கீழே போனதால், ஏனைய வகுப்பு ஹிந்துக்களும் கீழ் நிலையை எய்தி விட்டார்கள். பிராம்மணீயம் புத்துயிர் பெறு விட்டால், ஹிந்து மதம் அழிந்து போகும். இதில் எனக்குத் துளியும் ஐயமில்லை. பிராம்மணீயம் அதாவது ஹிந்து மதம் புத்துயிர் பெற்று விட்டதா வென்பதை நிச்சயமாய்க் காட்டக் கூடிய சான்று யாது? தீண்டாமை அடியோடு ஒழிந்து போவது தான்.

இன்று, பிராம்மணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்பன வெல்லாம் வெறுமனே விலாசங்களா யிருக்கின்றன. ‘வர்ணம்’ என்பதற்கு நான் கொண்டிருக்கும் அர்த்தத்தில், முற்றிலும் வர்ணக் குழப்பமே யேற்பட்டிருக்கின்றது. எல்லா ஹிந்துக்களும் ஒரே வகுப்பினரெனக் கருதுவதால் நமது ஞானமும் ஆற்றலும் செல்வமும் மறைந்து விட மாட்டா. ஆனால், அவை ஒரு குறுகிய சமய வகுப்பாருக்கன்றி, சத்தியத்திற்கும் மனித குல முழுவதற்கும் தொண்டு புரிய உபயோகமாகும்.

எவ்வாறாயினும் சரி; தீண்டாமை விலக்குப் போராட்டத்தில் நான் ஈடுபட்டிருப்பது, மனித சமூகமானது முற்றிலும் மறு மலர்ச்சியைப் பெறச் செய்ய வேண்டுமென்ற ஆசையினாலேயே. அது ஓர் வெறுங் கனவாக, கிளிஞ்சலில் தோன்றும் வெள்ளியைப் போன்ற மாயையாக, இருத்தல் கூடும். அக் கனவு நீடித்திருக்கும் வரையில், எனக்கு அது மாயையா யில்லை. ரோமேன்ரோலந்து கூறியதுபோலவே “வெற்றி, இலட்சியத்தை யடைவதில் இல்லை. அதைப் பெறுவதற்குப் புரியும் சலியா முயற்சியிலேயே வெற்றி யிருக்கின்றது.” —‘ஹரிஜன்’

நமது குறிப்புகள்

"மாந்தோப்பில் மாமன் மச்சான்"

"மாந்தோப்பிலே மாமாவும் வேண்டாம்; மச்சான் உறவும் வேண்டாம். அதெல்லாம் தோப்புக்கு வெளியிலேயே நடக்கட்டும்" என்றானாம் ஒரு குடியானவன். அந்தக் குடியானவன் மாங்காய் விஷயத்தில் எவ்வளவு கெடுபிடியா யிருந்தானோ அதைவிடக் கெடுபிடியோடு துரைத்தனத்தார் தங்கள் போலீஸ் இலாகாவைக் காப்பாற்றிக் கொண்டிருக்கின்றனர். "எங்கே வேணுமானாலும் சிக்கனப் பேச்சு பேசுங்கள்! அந்தப் பேச்சை போலீஸ் இலாகா அருகில் கொண்டு வராதீர்கள்" என்று ஆங்காங்கு ஹோம் மெம்பர்கள் அபிப்பிராயப் படுவது வழக்கம்.

வங்காளப் போலீஸ் இலாகா செலவு வருஷா வருஷம் உயர்ந்து கொண்டே வந்திருக்கிறது. வரவு-செலவு திட்டப்படி இந்த வருட போலீஸ் செலவுக்கு 44 லக்ஷம் வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். வங்காளத்தின் மொத்த ஜனத் தொகை 11 லக்ஷம்தான். 11 லக்ஷம் ஜனங்களுக்கு 44 லக்ஷ ரூபாய் போலீஸ் செலவா? இதென்ன அநியாயம்! இந்தப் பஞ்ச காலத்தில் பொது ஜனங்கள், தலைக்கு 4 ரூபா வீதம் விதம் போலீஸ் தக்ஷிணை தருவதா? இதை ஆக்ஷேபித்து சில சட்டசபை அங்கத்தினர்கள் கூச்சலிட்டார்கள். ஆனால் 'மாந்தோப்பில் மச்சான் உறவு வேண்டாம்' என்ற ரீதியில் தமது சட்ட சபையின் கோரிக்கையை ஹோம் மெம்பர் தோற்கடித்து விட்டார்.

மாட்டுக்கு சிவப்புத் துணிபோல்—

நாகபுரிக்கு அருகிலுள்ள ஒரு ஊரில் கோவாபரேடிவ் பாங்கின் வருஷோத்ஸவம் நடைபெற்றது. அதற்கு டெபுடி கமிஷனரையும் அழைத்திருந்தார்கள். கூட்டத்துக்கு வந்திருந்த கமிஷனருக்கு ஏதோ ஒன்று கண்ணை உறுத்தியது. அந்தக் கட்டிடத்தின் மீது பறந்து கொண்டிருந்த தேசியக் கொடியைக் காண அவருக்கு சகிக்கவில்லை. "இந்தக் கொடி இருக்கும் வரையில் என்னால் இங்கு இருக்க முடியாது. துரைத்தனத்தைத் தொலைத்து விட வேண்டுமென்றுள்ள ஓர் கூட்டத்தின் அறிகுறி இந்த தேசியக்கொடி யென்று நினைக்கிறேன்" என்று கூறினர். கூட்டத் தலைவர் ஏதேதோ சமாதானம் சொல்லிப் பார்த்தார். கமிஷனரோ சிறிதேனும் செவி சாய்க்காமல், இன்னும் சில கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களையும் அழைத்துக்கொண்டு வெளியே போய் விட்டார். ஊமைக்கு முன்னே மூக்கைச் சொறிந்தால் கோபம் வருமென்பார்கள். ஜல்லிக்கட்டு மாட்டுக்குச் சிவப்புத் துணியைக் கண்டால்சீற்றம் எழுமென்பார்கள். அதைப் போலவே டி கமிஷனருக்கு மூவர்ணத் துணியைக் கண்டபோது ஆத்திரம் ஏற்பட்டது போலும்! முக்கியமான சம்பவங்களின் போது தேசியக் கொடியைப் போடுவதுதான் தேசிய மரியாதை. அதற்காக அதிகாரிகள் கோபமுறுவது அதிகப்பிரசங்கித் தனமாகும்!

ஹிந்திகி ஜேய்!

வட இந்தியாவில் பிரயாணம் செய்ய நேர்ந்து, அங்கு பாஷை ஏதும் விளங்காமல் பேந்தப் பேந்த விழிக்கும் தமிழர்களைப் பார்த்திருக்கிறோம். வட இந்தியாவில் ஆங்கில மறிந்திருந்தாற் கூடப் பிரயோஜனமில்லை. ஆனால் கொஞ்சம் ஹிந்தி தெரிந்திருந்தானால் எல்லாவிடத்திலும் சமாளித்துவிடலாம். வட இந்தியாவில் வியாபார பாஷையாக பெரும்பாலும் ஹிந்தியே உபயோகிக்கப்படுகிறது. அது தவிர இந்தியாவில் பெரும்பான்மையோரால் பேசப்பட்டு வரும் ஹிந்தியை ராஜீயப் பொது பாஷையாக ஆக்கிவிட வேண்டுமென காங்கிரஸ் மகாசபையும் சொல்லி யிருக்கிறது. இதையெல்லாம் உணர்ந்து தான் காந்திஜீ, தென்னிந்தியாவில் ஹிந்தி பிரசார இயக்கத்தை சிருஷ்டித்தார். தென்னிந்தியாவில் ஹிந்தி படிப்பவர்களுக்காக வருடத்திற்கு இரு முறை பரிக்ஷைகள் நடைபெறுகின்றன. வருடா வருடம் ஹிந்தி பரிக்ஷைகளில் கலந்து கொள்பவரின் தொகை வர வர உயர்ந்துகொண்டே வருவதைக் காண சந்தோஷமே. புள்ளி விவரம் பின்வருமாறு:—

வருடம்	பிரதம பரிக்ஷை	மத்யம பரிக்ஷை	ராஷ்ட்ரபாஷா பரிக்ஷை
1929	1087	384	186
1930	1103	352	243
1931	2683	729	389
1932	5286	2316	908

ஆனால் தென்னாட்டில் இந்த வளர்ச்சியின் வேகம் போதாது என்பது நமது அபிப்பிராயம்.

காகிதமும் காந்திஜியும்

என்ன செட்டு! என்ன சிக்கனம்! இந்திய துரைத்தனத்தார் இப்போது நாலணா, இரண்டணாவைக் கூட விடாது கணக்குப் பார்க்க ஆரம்பித்திருப்பது உலக க்ஷேமத்திற்குத் தானல்லவா? 'வெள்ளைக் கடுதாசி' என்ற ஓர் அபூர்வ வஸ்துவை சர்க்கார் சிருட்டித்தார்களே, அதன் விலை நாலணா தான். பத்திரிகைகளெல்லாம் அந்த தஸ்தாவேஜியின் சாராம்சத்தை வெளியிட்டு விட்டபடியால் சர்க்கார் பதிப்புகள் விலை போகாமல் தூங்கிக்கொண்டிருக்கின்றனவோ என்னவோ தெரியவில்லை. ஆகவே அதிக நஷ்டம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டியதும் அவசியம் தான்.

எரவாடாவிலுள்ள மகாத்மா காந்திக்கு வெள்ளைக் கடுதாசியின் நகல் அனுப்பப்பட்டதா வென்று ஒருவர் சட்ட சபையில் கேள்வி போட்டபோது, "காந்திஜிக்கு வேணுமானால், எங்களுக்கு எழுதிக் கேட்கட்டுமே! பிறகு அனுப்புகின்றோம்" என்று ஹோம் மெம்பர் சொன்னாராம். நாலணா விலையுள்ள ஒரு பிரதியை இனாமாக அனுப்பி விடுவதென்றால் செட்டுப் புத்தியுடைய சர்க்கார் யோசித்துத் தான் ஆகவேண்டும். ஆனால் சட்ட சபையில் இந்த தர்ம காரியத்துக்காக நாலணா எடுத்துக் கொடுத்து, "ஓர் பிரதியை எரவாடாவுக்கு அனுப்புங்கள்" என்று சொல்வதற்கு ஒருவர் கூட இல்லையா என்ன? மேலும், 'ஹரிஜன்' பத்திரிகையின் கட்டுரையாளர் என்ற காரணத்தைக் கொண்டாவது காந்திஜிக்கு ஒரு 'வெள்ளைக் கடுதாசி'யை சர்க்கார் அனுப்பியிருக்கலா மன்றோ! பத்திரிகைத் தொழிலுக்கு துரைத்தனங்கள் காட்ட வேண்டிய மரியாதை ஹோம் மெம்பருக்கு ஞாபகத்திற்கு வர வேண்டு மென்று கட்டாயமா?

ஆனால் வெள்ளைக் கடுதாசியை எரவாடாவுக்கு அனுப்பாததற்கு இன்னொரு காரணமும் இருக்கலாம். இந்தக் கடுதாசியின் வண்டவாளத்தைப் பற்றி அது வருவதற்கு முன்னரே காந்திஜி அறிந்திருப்பாரன்றோ! இது வந்த பின்பு அதைப் பற்றி அவரென்ன அபிப்பிராயம் தருவாரென்பதில் சந்தேகமுமுண்டா? ஆகவே ஹோம் மெம்பர் கால் ரூபா பெறுமான முள்ள கடுதாசியை அனுப்பத் தயங்கி விட்டார் போலும்! ஆகவே, "காந்திஜி கேட்கட்டும்! தருகிறேன்" என்று சட்ட சபையில் திமிராகக் கூறி யிருக்கிறார்.

"பாழுங் கடன் தீராதோ!"

கடனில்லாத மிராசுதாரர்களைத் தற்காலத்தில் காண்பது அரிது. அவ்வாறு நாட்டில் வறுமை வளர்ந்து விட்டது. கிராமங்களின் பண நிலைமையைப் பற்றி ஆராய்ச்சி செய்ய நியமிக்கப்பட்ட சர்க்கார் கமிட்டி (Provincial Banking Enquiry Committee) இந்தியக் குடியானவர்கள் பட்டுள்ள கடன் தொகைகள் எவ்வளவிருக்கலா மென்று ஒரு மதிப்பு போட்டனர். அதில் இந்தியக் குடியானவர்கள் 900 கோடி ரூபாய் வரையில் கடன் பட்டிருப்பதாகக் கூறினர். நஷ்டம் மிகுந்த உழவுத் தொழில் மூலமாக எப்போது இவ்வளவு கடனையும் விவசாயிகள் அடைக்கப் போகின்றனர்? வறுமையும் ஏறிக் கொண்டே போகிறது. கடனும் அதிகமாகிக் கொண்டே போகிறது. இதற்கு முடிவு தான் என்ன?

சென்னை மாகாணத்தில் குடியானவர் பட்டுள்ள கடன் தொகையின் மொத்தம் 150 கோடி ரூபாயென மதிப்பு போட்டிருக்கின்றனர். வீதாசாரமாகப் பிரித்தால், தலைக்கு 50 ரூபா வீதம் கடன் சுமையானது இருந்து கொண்டிருர்கிறது. ஒவ்வொரு எக்கர் பூமியின்மீதும் சராசரியில் 44 ரூபா கடன் ஏறியிருக்கிறது. இந்தக் கணக்குகளைப் பார்க்கும் போது நமது மாகாணத்தில் கடன் பிசாசு தாண்டவமாடி வருவது நன்றாய் விளங்கும்.

கோவாபரேடிவ் இயக்க மென்கிறார்கள்; கமிஷன்களை அனுப்புகிறார்கள்; பஞ்சாயத்தை நியமிக்கிறார்கள்; சட்ட சபைகளிலும் மேடைகளிலும் சக்கர வட்டமாகப் பிரசங்கம் செய்கிறார்கள். வெறும் வார்த்தைகளினால் விவசாயியின் சுமையைக் குறைக்க முடியுமா? பிதிரார்ஜித சொத்தை விட அதிகமாகக் குடும்பக் கடனையே பிதிரார்ஜிதமாக ஏற்றுக் கொண்டு அநேக குழந்தைகள் பிறக்கின்றன. வறுமையின் கூற்றினால் நாகரிக வளர்ச்சிக்கு வழியே யின்றி கேவலம் ஜீவச் சவங்களாக கிராம மக்கள் வாழ வேண்டி யிருக்கிறது. 'இந்தியக் கடன்' என்று சர்க்கார் பட்டிருக்கும் கடனுக்கு சமதையாக ஏழைக் கிராம மக்களின் சில்லறைக் கடனின் மொத்தத் தொகையும் இருப்பதை சர்க்கார் கவனிக்கலாகாதா? இந்தத் துயருக்கு என்ன மருந்து? நிலத் தீர்வையும், நீர்த் தீர்வையும் குறைத்து விவசாயிக்கு உதவி செய்வது தான் சரியான மருந்து. நாளடைவில் நல மேற்படுவதற்கு அப்போது தான் இடமுண்டு.

சட்ட மறுப்பு இயக்கம்

கள்ளிக்கோட்டையில் விதேசி ஜவுளிக் கடை மறியல் செய்ததற்காக 8 பேரும், கள்ளுக் கடை மறியலுக்காக 5 பேரும் கைதியாயினர். சென்னையில் துண்டுப் பிரசுரம் வைத்துக் கொண்டிருந்ததற்காக 5 பேர் கைதி. மன்னார்குடி ராஜு அய்யர், கடலூர் தணிகாசலம், இன்னும் ஒருவரையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்து பிறகு விட்டு விட்டனர். கராச்சியிலிருந்து கல்கத்தா காங்கிரஸிற்குப் போவதாகச் சந்தேகித்து 11 பேர்களை முனிசிபல் எல்லையை விட்டுப் போலீசார் உத்திரவின்றிப் போகக் கூடாதென்று தடை செய்திருக்கிறார்கள். லாகூரில் 'வீர பாரதி' யின் மாஜி ஆசிரியருக்கும், மற்றொரு காங்கிரஸ்காரருக்கும் மறியல் செய்ததற்காக தலா 4 மாதம் கடுங்காவல். கல்கத்தாவில் ஒரு வீட்டைச் சோதனை யிட்டு காங்கிரஸ் மகா நாடு சம்பந்தமாக 2000 துண்டுப் பிரசுரங்களைக் கைப்பற்றி 8 பேர்களைக் கைது செய்திருக்கின்றனர். மகமதாபாத் தாலுக்கா பிதாஜ் கிராமத்திலிருக்கும் காந்தி சத்தியாக்கிரக ஆசிரம நிலத்தின் தீர்வை கொடுபடாததற்காக ஆசிரம மாடுகள் ஜப்தி செய்யப்பட்டு ரூ. 175க்கு ஏலம் விடப்பட்டது. ஆமதாபாத்தில் ரயில்வே பிளாட்பாரத்தில் சட்ட விரோதமான உப்பு பொட்டலம் விற்றுக் கொண்டிருந்த ஒரு காங்கிரஸ் தொண்டருக்கு 3 மாதம் கடுங்காவல். மிருதுளா தேவிக்கு பெல்காமை விட்டு வெளியே போகக் கூடாதென்று தடை உத்திரவு. குடியாத்தத்தில் ரயிலை நிறுத்தியதற்காக தண்டிக்கப் பட்டவரின் அபராதத் தொகைக்காக அவருடைய தாயாருக்குச் சொந்தமான தட்டு முட்டுச் சாமான்களை ஜப்தி செய்தனராம். அலகாபாத்தில் நடந்த பெரியதொரு சோதனையின் பயனாக சில ஜமீன்தார்கள் உள்பட 35 பேர்கள் கைது செய்யப்பட்டனராம். கல்கத்தாவில் ஒரே தடவையில் 200 வீடுகளைச் சோதனை யிட்டதில் ஒன்றுமே அகப்படவில்லை. காங்கிரஸுக்குப் போவதாக சந்தேகிக்கப்பட்டு நாகபுரியில் 26 பேர்களும், கட்டாக்கில் 15 பேர்களும் கைதியாயினர்.

சைகோன் பிரஷ்ட உத்திரவு

இண்டோ-சீனக் கவர்ன்மெண்டார், அவ்வூர் கோர்ட்டு டிக்ரிகளைக் கொண்டு நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள் கடன் வசூல் செய்ய யத்தனித்த பொழுது மூவருக்கு நாட்டை விட்டு வெளியே போகவேண்டு மென்று உத்திர விடப்பட்டதாம். ஒருவர் ஏற்கனவே பிரஷ்டம் செய்யப்பட்டாராம். சைகோன் பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர் எவ்வளவோ முயன்றும், பிரஞ்சு கவர்ன்மெண்டு இணங்கவில்லை யென்றும், பிரஷ்டம் செப்பப்பட்டவர்கள் சிங்கப்பூருக்குப் பிரயாணமாகி விட்டார்கள் என்றும் தெரிகிறது.

வீடு சோதனை

மதுரை தேசியப் பள்ளிக்கூடம் போலீசாரால் சோதனை யிடப்பட்டதில் ஒன்றும் அகப்படவில்லை. சீர்காழியில் சாமிநாத செட்டியார், நீலகண்ட பிரம்மசாரி, ஞானசம்பந்தம் முதலியவர்களின் வீடுகள் சோதனை. லாகூரில் பகத்சிங் படை சம்பந்தமாகப் பல வீடுகளைச் சோதனை யிட்டு நால்வரைக் கைது செய்திருக்கின்றனர். அலகாபாத்திலும் பல வீடுகளைச் சோதனை செய்து 6 பேர்களைக் கைது செய்தனர். எல்லூரில் 11 பேர்களின் வீடுகளை சோதனை யிட்டுச் சில காங்கிரஸ் துண்டுப் பிரசுரங்களை போலீஸார் கைப்பற்றினர். கான்பூரில் காங்கிரஸ் காரியாலயத்தை திடீரென்று போலீசார் சோதனை யிட்டு ஏராளமான பிரசுரங்களையும் கைப்பற்றி இருவரையும் கைது செய்தனர். மதுரையில் தியாகராஜ சிவத்தினிடம் போலீசார் வந்து "உம்முடைய புகைப் படம் ஏதாவது இருக்கிறதா?" என்று கேட்டதாகவும், இல்லை யென்று அவர் மறுக்கவே, போலீசார் செலவில் புகைப்படத்துக்கு உட்கார முடியுமா என்று கேட்டதற்கும் அவர் இணங்காதிருக்கவே, படமெடுப்பவர் ஒருவரிடம் ஏற்பாடு செய்திருப்பதாயும் சாவகாச மேற்படும் போது அங்கு போனால் அவர் படம் எடுப்பார் என்றும் போலீசார் சொல்லி விட்டுப் போய் விட்டதாக செய்தி கிடைத்திருக்கிறது.

ஹார்க்கரே கேஸ் தள்ளுபடி

மகாத்மா காந்தியையும், மற்றும் பலரையும் ஹரி ஜனங்களின் விஷயமாக பிரசாரம் செய்வதைத் தடைசெய்ய உத்திரவிட வேண்டுமென்று பூனாவில் ஹார்கரே என்பவர் கொடுத்திருந்த வழக்கு செலவு தொகையுடன் கேஸ் தள்ளுபடி செய்யப் பட்டது.

Edited and Published by S. Subramanian
and Printed by M. R, Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras.